# அரசின் எத்தீர்வுத் திட்டமும் விடுதலைப் புலிகளின் ஒப்புதலின்றி வெற்றியளிக்க முடியாது

## பி. பி. சி. முகவர் இக்பால் தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் ஒப்புதல் இல்லாமல் அரசின் எந்தத் தீர்வுத் திட்டமும் வெற்றியளிக்க முடியாது என பி.பி.சியின் கொழும்பு செய்தி முகவர் இக்பால் தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்னைக்கு அரசினால் முன்வைக்கப்பட விருக்கும் தீர்வுத்திட்டம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தை விடு

(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 12 இதழ் 138
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-7-1995

## புலிகளைத் தோற்கடிக்க இராணுவத்தால் முடியாது

— அமால் ஜயசிங்க

(கொழும்பு)

ராணுவம் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று ஏ. எப். பி. செய்தியாளர் அமல் ஜயசிங்க பி. பி. சி க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:- இராணுவ உபகரணங்களும், தளபாடங்களும் ஏற்றுவதற்கு இலங்கையிலிருந்து விமானங்கள் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைப்பதோடு யுத்தத்தையும் தொடர்ந்து நடத்துவதற்கு எண்ணியிருப்பதாகும்.

அரசாங்கம் அரசியல் தீர்வாக முன்பு இருந்த மாகாண சபையை ஒத்த அமைப்பைத்தான் சிபாரிசு செய்ய இருக்கிறது என்றார். -ம-சி

## ★ வலி. வடக்கில் நேற்று

# படையினர் முன்னேற்ற முயற்சி

# விடுதலைப்புலிகளால் முறியடிப்பு

## இழப்புகளுடன் ராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் நேற்றுக்காலை கடும் ஷெல், துப்பாக்கித் தாக்குதல்களுடன் வலிகாமம் வடக்கில் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

## ஷெல், சூட்டுக்கு இருவர் பலி

வலிகாமம் வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட ஷெல், துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் இருவர் ஸ்தலத்திலேயே பலியாயினர். இச்சம்பவத்தின்போது ஐயனார்கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த சிவலோகநாதன் குணனிளி என்ற 09 வயதுச் சிறுமி தலை சிதறி ஸ்தலத்திலேயே பலியானார். மல்லாகம் சேர்ச் வீதியில் இராசையா (50-வயது என்பவர் துப்பாக்கிச் சூட்டினால் பலியானார். இவரின் உடலின் பல்வேறு பகுதிகளிலும் காயங்கள் காணப்பட்டன. சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(90-170-கி)

## தாக்குதலில் பலர் காயமடைந்தனர்

நேற்றைய ஷெல் தாக்குதலின் போது மல்லாகம் பகுதியில் கஸ்தூரி தர்மலிங்கம் (45-வயது) சுன்னாகம் சூராவத்தையில் ஆர். மார்க்கண்டு (64-வயது), சுன்னாகத்தில் கே. பாஸ்கரன் (30-வயது) ஆகிய மூவரும் ஷெல் தாக்குதலினால் காயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்ததாகவும் அவர்கள் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(90-170-கி)

## நான்கு மணி நேரம் ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 5.45 மணியில் இருந்து சுமார் நான்குமணி நேரமாக வலிகாமம் மேற்கு பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல் வலிவடக்கு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, உடுவில், கந்தரோடை, மருதனார்மடம் அளவெட்டி தெற்கு போன்ற பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

170-கி

## ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

வலிகாமம் வடக்கு பிரிவில் நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினையடுத்து சுன்னாகம், மல்லாகம், ஏழாலைப் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து மக்களும் நேற்று அதிகாலை முதலே அகதிகளாக அகப்பட்டதைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியேறினர். மீண்டும் இம் மக்கள் நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி, கோப்பாய், தென்மராட்சிப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர் ஆயிரக்கணக்கானோர் இச்சம்பவத்தில் அகதிகளாக்கப்பட்டனர். அதிகாலை இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் பெரும்பாலான மக்கள் நித்திரையிலிருந்து விழித்து அங்கலாய்ப்புடன் செய்வதறியாது உடமைகளையும் விடுத்துக் குடும்பம் குடும்பமாக வெளியேறினர்

170

## கடைகள், வீடுகள் பலத்த சேதம்

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் வீச்சுக்கு இலக்காகி சுன்னாகம் சந்தைப்பகுதியில் கடைகள் சில சேதமடைந்துள்ளன. இதனைவிட பொதுமக்களின் குடிமனைகள் சிலவும் ஷெல்வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளன. மல்லாகம் பகுதியிலும் ஷெல்லுக்கு இலக்காகி மக்களின் குடியிருப்புக்கள் சேதத்துக்குள்ளானது

170 கி

## இரு போராளிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை வலி வடக்கில் முன்னேற முயன்ற படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்:

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இம்மோதலில் வீரச்சாவடைந்த மணியரசன் (தாமோதரம்பிள்ளை சுரேஷ் குமார் கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்) என்ற மாவீரனின் வித்துடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து

(6ம் பக்கம் பார்க்க)

## ஒரு வயதுக் குழந்தையும் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் என்னும் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்,

கணவன், மனைவி, ஒருவயதுக்குழந்தை உட்பட மேற்படி 10 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. க கி

## ரெலிகொம் அலுவலகத்தில் வெடிகுண்டு மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு ரெலிகொம் நிறுவனத்தில் நேற்று சக்தி மிக்க வெடிகுண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு அது உடனடியாகவே செயழிலக்க செய்யப்பட்டதாக பாதுகாப்பு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கொல்கலன் ஒன்றினுள்

(6ம் பக்கம் பார்க்க)

## அளவெட்டி, காரைநகரில் இருந்தும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் இருந்தும் நேற்று அதிகாலை 2-30 மணிமுதல் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களையும் சரமாரியாக

(5ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் ஆயுதங்கள் விமானத்தில் வருகின்றன

(மணிலா)

வடக்கு கிழக்கு யுத்தத்திற்காக இலங்கை படையினருக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கவுள்ளதாக வெரித்தாஸ் சிங்களச்சேவை நேற்றிரவு தெரிவித்தது.

பாகிஸ்தானின் கராச்சி, இஸ்லாமாபாத் விமான நிலையங்க

(6ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது!

(கொழும்பு)

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வெதனையும் முன் வைக்காமல் தமிழ் மக்களின் ஆதரவினையும் பெறாமல், ஒரு கெரில்லா அணியை இலங்கை இராணுவத்தின் துணை கொண்ட யுத்தத்தின்மூலம் பணியவைக்க நினைத்து யுத்தம் புரிந்தால் அது அவர்களைப் பலப்படுத்துவதாகவே முடியும் என தென்னிலங்கைப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை மேலும் தெரிவிப்பதாவது, விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் நியாமான அபிலாசைகளை கோரிக்கைகளாகக் கொண்டிருக்கிறார்கள்

எனவே தமிழ்மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் உரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் வரை விடுதலைப்புலிகளை தமிழ்மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடமுடியாது.

ஆகவே அரசாங்கம் தனது அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் தமிழ்மக்கள் இன்று எதிர்நோக்கும் இன்னல்கள் இடர்பாடுகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான நிலையான தீர்வொன்றை வழங்கவேண்டும்; இதை விடுத்து போரின்மூலம் விடுதலைப்புலிகளை தோற்கடிப்பது என்பது சாத்தியமற்றது. ர-ரி


## வரி விளம்பரம்

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலம் சுலபமான முறையில் பேசக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? விரும்பினால் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; விக்னேஸ்வரன், இல: 426 (புதிய) இல. 302 (பழைய) காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி-1561)

### [O/L] MATHS

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு குறைந்த காலங்களில் விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில்Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-1570)


## ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

ஜூலை மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்களின் .25 வீதமானவை உரியவர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக யாழ். செயலக ஓய்வூதிய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை வங்கி யாழ். கிளையில் வைத்து பெரும்பாலான ஓய்வூதியர்களுக்கு ஜூலைமாத வவுச்சர்கள் ஓய்வூதியப்பகுதியினரால் வழங்கப்பட்டதாகவும் எஞ்சிய வவுச்சர்களே தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

170-சி


மண்ணில் இருந்து விண்ணிற்கு

அஞ்சலி

1995



அமரர்

பொன்னையா கதிரவேலு

18 – 04 – 1916

28 – 07 – 1983

வருடாந்த மதச் சடங்குகள் 14 – 08 – 95ல் லண்டனில் நடைபெறும். (சி-1563)


## தபாற்கந்தோர் சேதம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தபாற் கந்தோர் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்துள்ளது அங்குள்ள தளபாடங்கள் பல இராணுவத்தினரால் உடைக்கப்பட்டுள்ளன.

இக்கந்தோரின் கதவுகள், யன்னல்களும் உடைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வட்டுக்கோட்டை பரஸ்பர சகாய நிதிச்சங்கமும் உடைக்கப் பட்டு அங்கிருந்த பல கொப்பிகள், பைல்கள் எடுத்து கிணற்றினுள் போடப்பட்டுள்ளன. இக்காரியாலயத்தின் கதவுகள், யன்னல்களும் உடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

139

## தமிழீழ வைப்பக சிறப்புப் பணியகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வைப்பகம் தனது நிதி விரிவாக்க நடவடிக்கையின் ஒரு அம்சமாக ஆகஸ்ட் முதலாம் திகதி தொடங்கவுள்ள நல்லூர் திருவிழாக் காலத்தில் அங்கு தமிழீழ வைப்பகம் சிறப்புப் பணியகம் ஒன்றை அமைக்கவும் அதன் மூலம் மக்களுக்கு சேவை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் தேட்டத்தை ஊக்குவிக்கவும் வருவாயைப் பெருக்கவும் வாடிக்கையாளர்கள் வைப்புகளுக்கு கூடுதல் வட்டி வீதத்தை பெறவும் வாய்ப்புகள் உண்டாகும்.

நிலையான வைப்புக்கு சலுகைவட்டியாக 20% தையும் தேட்டக் கணக்கை தொடங்கி பரிசுபெறும் தகுதியையும் நல்லூர் திருவிழாக்காலத்தில் தமிழீழ வைப்பக சிறப்புப் பணியகத்தில் கணக்குகளை தொடங்குபவர்கள் மட்டும் பெறமுடியும்.

## தபால் பொதியிடும் பைகளுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் தபால்களை பொதியிடும் பைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கொழும்பில் இருந்து வெளியூர் தபால்கள் வந்து சேராததினால் யாழ் பிரதம தபாலகத்தில் பொதியிடும் பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு வெளியூர் தபால்களை பொதியிட்டு அனுப்பி வைப்பதற்கு தபால் பைகள் இன்றி யாழ் தபாலக ஊழியர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

170-சி

## ராணுவ தீர்வு சாத்தியமில்லை அரசியல் தீர்வே ஒரே வழியாகும்

(கொழும்பு)

'வடக்குக் கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு தன்னுடைய நியாயப்பாட்டை எப்போதோ இழந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் கடந்த 17 வருட யுத்த அனுபவமாகும்' என கலாநிதி சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவத் தீர்வை நாடும் பிரிவினர் அரசினுள் பலம் பெற்று வருகிறார்கள். விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை தொடுத்திருப்பதால் வடக்கிலுள்ள தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை செய்வதற்காகத்தான் யுத்தம் புரிகிறோம் என அரசு சொல்லுகிறது

இவர்கள் அடிப்படையான உண்மையை மறந்து விட்டார்கள். இலங்கை அரசின் பிரதிநிதிகளாகவும் சின்னமாகவும் தமிழ் மக்கள் எதிர் கொள்வது ஒடுக்கு முறையாளர்களான சிங்களப் படையினரைத்தான். இந்த ஒடுக்கு முறையாளர்களைக் கொண்டு வடக்குத் தமிழ் மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்வது அரசியல் நகைப்புக்குரியது.

வடக்கில் தான் விடுதலைப் புலிகளின் ஆட்சி. அங்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை என்று அரசு சொன்னாலும் வடக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களுக்கு சமத்துவமான உரிமைகள் வழங்கப் பட்டதா?

அரசுக்கு பேச்சு வார்த்தையின் போதே அபிவிருத்தி பற்றியோ தேசிய இனப்பிரச்னைத் தீர்வு பற்றியோ எவ்வித திட்டமும் இருக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கென அனுப்பிய குழுக்களின் சாத்தியமற்ற அணுகுமுறைகள் அரசு சீரிய முறையில் பேச்சு வார்த்தை நடத்த முயலவில்லை என்பதையே காட்டுகிறது. எமது தேசிய இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை. அரசியல் தீர்வே ஒரே வழி என்றும் கூறினார். ர-ரி

## இராசி பலன்

28–07–1995

(தமிழுக்கு ஆடி–12)

வெள்ளிக்கிழமை

பிரதமை முன்னிரவு 10 22 வரை: பூசம் முற்பகல் 10-07 வரை மரணயோகம், இராகு காலம் காண 10-32 முதல் 12-02 வரை சுபவேளை காலை 6-02 முதல் 7-32 வரை,

மேடம்: முரண்பாடு, தொழில் கவலை, தவறிழைத்தல்.

இடபம்: குடும்பநன்மை, தெய்வீக சிந்தனை, பணவரவு,

மிதுனம்: முயற்சி தாமதம். வீண் அலைச்சல, மனமுறிவு.

கடகம்: காரிய சித்தி பயண அனுகூலம், வாதத்திறமை,

சிங்கம்: தொழில் பகை, நண்பர் மனஸ்தாபம், வீண் விரயம்.

கன்னி: புதிய முயற்சி, சுபகாரியம், தானதர்மம்.

துலாம்: இனிய சம்பாஷனை கடமையுணர்வு, சகோதர உதவி.

விருச்சிகம்: அதிகாரிகள் துன்பம், அகங்காரம், வேதனை

தனுசு: பிறர் வெறுப்பு, அவப்பெயர். தனிமைப்படல்.

மகரம்: அறிஞர் கலந்துரையாடல், பொதுப்பணி. நற்பெயர்.

கும்பம்: எதிர்பாராத நன்மை, சுபக்கனவு, தொழில் லாபம்.

மீனம்: போட்டிநிலை, வீண் வம்பு, குடும்ப கவலை.

— ஜோஸ்யர்


தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்

'இணைந்திடுவீர் எம்முடன் வளர்த்திடுவோம் வளமுடன்'

தேட்டத்தை ஊக்குவிக்கவும்

வருவாயைப் பெருக்கவும்

நல்லூர் திருவிழாக் காலத்தில்

தமிழீழ வைப்பகம் வழங்க இருக்கும்

## ஓர் அரிய வாய்ப்பு

கூடுதல் வட்டி வீதத்திற்கும் பூரண காப்பிற்கும்

தமிழீழத்தில் தனித்துவம் பேணுவது

தமிழீழ வைப்பகம் ஒன்று தான்

நிலையான வைப்பிற்கான இந்தச் சலுகைவட்டி 20% ஐதயும், தேட்டக் கணக்கை தொடங்கி பரிசு பெறும் தகுதியையும் நல்லூர் திருவிழாக்காலத்தில் தமிழீழ வைப்பக சிறப்புப் பணியகத்தில் கணக்குகளை தொடங்குபவர்கள் மட்டும் பெறமுடியும்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

## தமிழீழ வைப்பகம்,

லெப். கேணல் ராதா சாலை, யாழ்ப்பாணம்.

(எ-5146)

மணிவாக்கு

''எதுவும் வரட்டும், உலகம் இருந்தாலும் சரி; அழிந்துவிட்டாலும் சரி நான் என் கடமையை மறக்க மாட்டேன்.'' — இவை பெருவீரனின் வார்த்தைகள்.

— சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## சேவைக்கு நன்றி

சிறிலங்கா அரசாங்கம் ''முன்னேறிப் பாய்ச்சல்'' நடவடிக்கையை 09-07-95ல் ஆரம்பித்தது; இவ்இராணுவ நடவடிக்கை 20-07-95 வரை நடைபெற்றது. இந்த இராணுவ நடவடிக்கையால் பெருமளவு மக்கள் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர்கள் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து வாழவேண்டிய சூழ்நிலை உருவாகியது. இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தும், 1,400க்கு மேற்பட்டோர் காயமடைந்தும், பலர் வலுவிழந்து அங்கவீனர்களாக வாழும் நிலையும் ஏற்பட்டது.

இடம்பெயர்ந்து நிர்க்கதியாகி ஏதிலிகளாக வந்த மக்களுக்கு சீரான ஒழுங்கான முறையில் பராமரிப்புச் சேவையில் அரச திணைக்களங்கள், பிரதேச செயலர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், நிர்வாக சேவையினர், பொதுமக்கள் அமைப்புக்கள் ஈடுபட்டன.

இச்சேவைகளில் ஈடுபட்டவர்கள் எல்லோருமே பாராட்டுக்குரியவர்கள். விசேடமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 90க்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களை அமைத்து, இடம்பெயர்ந்தோரின் அடிப்படை வசதிகளான உணவு, குடிநீர், மலகூடம், தங்குமிடம் என்பனவற்றை வழங்கித் தன் சேவையை நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கான நிறைவான சேவையில் சமைத்த உணவு வழங்குவது தொடக்கம் சமையல் உபகரணங்கள், உணவுப் பொருட்கள், உடைகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், எரிபொருள், குடிநீர் வசதிகள் போன்றவற்றை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும், உள்ளூர் அறவழிப் போராட்டக்குழு செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டமையும் விசேடமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்த போது, அவர்களைத் தங்கள் சகோதரர் போலக் கருதி மனிதாபிமானத்துடன் தனிப்பட்டமுறையில் உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும், ஆதரவையும் வழங்கியவர்களும் போற்றப்பட வேண்டியவர்களாகும்.

குண்டு வீச்சினாலும் ஷெல் அடியினாலும் காயப்பட்டு நூற்றுக் கணக்கான மக்கள் வைத்திய மனைக்கு எடுத்துவரப்பட்டபோது இரவு பகல் என்று பாராது வைத்திய சேவையில் ஈடுபட்ட வைத்தியர்கள், தாதியர்கள், மற்றும் ஊழியர்கள் ஆற்றிய சேவை அரும் பெரும் சேவையாகும். எம்மண்ணில் கல்வி பயின்று எம்மண்ணைக் கைவிட்டு தமது சுயநலத்துக்காக தூர தேசம் போனவர்கள் போலல்லாது வைத்தியர்களின் பற்றுக்குறையின் மத்தியிலும் எம்முடன் நின்று சேவை செய்யும் டாக்டர்கள் மெச்சத் தக்கவர்களே.

முன்னைய காலங்கள் போலல்லாது முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்தோர்கள் பராமரிக்கப்பட்ட முறை மிகவும் ஒழுங்காகவும் சீராகவும் நடத்தப்பட்டமை சகல பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதில் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள் என்பதை வெளிக்காட்டிற்று. இதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிவதும் அதனால் ஏற்படும் அனர்த்தங்களும் தவிர்க்கப்பட்டன.

இதேவேளையில் காவல்துறையினரின் பங்களிப்பை மறந்துவிடக்கூடாது. இக்கால கட்டத்தில் இறந்தோரையும், காயப்பட்டவர்களையும் ஏற்றிக்கொண்டு வாகனங்கள் வேகமாகச் செல்லும் வேளைகளில் விபத்துக்கள் ஏற்படாத வண்ணம் வீதி ஒழுங்குகளை காவல்துறையினர் ஒழுங்காகப் பேணி அனர்த்தங்களைத் தடுப்பதில் பெரும் சேவை செய்தனர். அது மட்டுமல்லாமல் வதந்திகளைப் பரப்பி மக்களைக் கிலிக்குள்ளாக்குபவர்களைக் கைதுசெய்து வீண் வதந்திகள் பரவாமல் தடுத்தனர்.

இராணுவ நடவடிக்கையால் அநாதரவான மக்களின் உடமைகளை மீட்டெடுப்பதில் காவல் துறையினர் இப்போது ஈடுபட்டுள்ளனர். இராணுவ நடவக்கையின் போதும் அதன்பின்னரும் திருடர்களும் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளார்கள். அவர்களை இனங்கண்டு மக்களிடமிருந்து களவாடப்பட்ட பொருட்களை மீட்டெடுப்பதில் சங்கானை காவல் பணிமனையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். சங்கானை, சண்டிலிப்பாய், சங்கரத்தைப் பகுதிகளில் 35 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு மோட்டார் சைக்கிள்கள், றேடியோக்கள், டெக்குகள் போன்றவையும் மீட்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக சில திருடர்களும் கைதாகியுள்ளனர். இது சம்பந்தமான காவல் துறையினரின் சேவையும் தொடர்கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் எதிரியின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் பொது அமைப்புக்களும் மக்களும் செயற்பட்டமையைக் காணக்கூடியதாகஇருந்தது.

# "சிறுவர் நலனில் இலங்கை அரசு போதிய கவனம் செலுத்தவில்லை"

## மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(மணிலா)

இலங்கையில் சுமார் 80,000 சிறுவர்கள் முறையற்ற விதத்தில் தொழில் புரிந்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசை சாடியுள்ளது.

படிக்க வேண்டிய பள்ளிப் பருவத்தையுடைய 10 முதல் 14 வயதிலான சிறுவர்கள் நலனில் இலங்கை அரசு போதிய கவனம் செலுத்துவதில்லை.

இவர்கள் வீட்டு வேலையாட்களாகவும், கடை ஊழியர்களாகவும், சிறு சிறு தொழிற்சாலைகளின் பணியாளர்களாகவும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர்

சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி, 14 வயதிற்கு உட்பட்டோரை தொழிலுக்கு அமர்த்துதல் தடை போன்ற சட்டங்கள் இலங்கையில் இருந்த போதும் இவை செயலளவில் இல்லையெனவும் மன்னிப்புச்சபை இலங்கை அரசை குறை கூறியுள்ளது.

கே-ரி

# இலங்கை ராணுவ அதிகாரிகள் மீது மனிதஉரிமை அமைப்புகள்கண்டனம்

(மணிலா)

இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்புகள் பல, இலங்கை இராணுவ அதிகாரிகளையும் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகளையும் வன்மையாக கண்டித்துள்ளதாக வெரித்தாஸ் அறிவித்தது.

பாதுகாப்பு படையைச் சேர்ந்த பல அதிகாரிகள் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்களில் பலரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து வன்முறை கொடுமைகளுக்கு உட்படுத்தியது மனித உரிமை மீறல் குற்றமாகும்.

இக் குற்றங்களை புரிந்த பலர் தொடர்ந்து பதவி வகிப்பதோடு பதவி உயர்வுகளும் பெற்றுள்ளனர். இது முறைகேடான செயலாகும்.

இலங்கை அரசு மனித உரிமை மீறுவோர் மீது தகுந்த விசாரணை செய்து இராணுவ அதிகாரிகளை பதவி நீக்கம் செய்யவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா அரசின் கூட்டத்தொடரிலேயே இத்தகைய புலன் விசாரணைகளை செய்ய வேண்டுமென்றும்

இவ்வாறான அறிக்கையொன்றை தயாரித்து மனித உரிமைகள் அமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளதாகவும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

கே-ரி

# கொழும்பு பொலிஸில் தமிழரைப் பதியக் கோருவதற்கு கண்டனம்!

(கொழும்பு)

கொழும்புக்கு வரும் வெளி மாவட்ட தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டும் என அரசாங்கம் கோருவது மனித உரிமைமீறும் செயலாகும், என்று மனித உரிமை குழுக்கள் அண்மையில் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவிடம் வலியுறுத்தியுள்ளன.

தமது சொந்த நாட்டு மக்களை பிறநாட்டு மக்கள்போல் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள கோருவது மனித உரிமை மீறல் செயலாகும். இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் இவ் அமைப்புகள் கோரியுள்ளன.

இதன் நிமித்தமே ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் கொழும்பிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களும் அல்லது வீடுகளில் தங்குபவர்களும் அப் பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமது விபரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டியதில்லை, என பொலிஸ்மா அதிபர் அண்மையில் சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஆனால் இதேநேரம் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொள்ளும் வீட்டு உரிமையாளரையும், அவர்களின் வீடுகளில் தங்கி இருப்பவர்களையும் விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு உரிமை உண்டு என்றும், பொலிஸ்மா அதிபர் பிராங் டிசில்வா தெரிவித்துள்ளார்.

வி-ரி

## வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு மூடப்பட்டது

[பண்டத்தரிப்பு]

மானிப்பாயில் செயற்பட்டு வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மடகட்டிடத்தில் நடாத்திவந்த வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் மூடப்பட்டுள்ளது

கடந்த மூன்று வருடகாலமாக இக்கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வந்த இந்த வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் இப்பகுதி மக்களும் குறிப்பாக இடம் பெயர்ந்துள்ள மக்களும் சிகிச்சை பெற்று வந்தனர்.

இக்கட்டிடம் தங்களது பாவனைக்கு தேவைப் படுவதாக திருக்குடும்ப கன்னியர் மடத்தினர் அறிவித்ததை அடுத்து தற்காலிகமாக வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதாகவும், வேறு இடம் தேடிக்கொண்டிருப்பதாகவும், பொருத்தமான கட்டிடம் கிடைத்தவுடன் இந்த வெளிநோயாளர் பிரிவு மீண்டும் செயல்படும் என்றும் மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி. எஸ்.சிவராணி தெரிவித்தார்.

72

### வெள்ளி விருந்து

#### அழகே தெய்வம்!

முருகன் இயற்கை வாயிலாகத் தனது அழகை நாடோறும் பொழியாதிருப்பின் உலகில் அழகேது? அழகில்லையேல் வாழ்வேது? ஒருவனது வாழ்வு அவனது அழகையே பொறுத்து நிற்கிறது. உடலில் நாம்பில் உரங்குன்றப்பெறுகிறவன் அழகுடையவனாக இரான். ஒருவனது உடல்நலத்தை அவனது அழகு புலப்படுத்தும்.

உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் உடல் நலமுற்றுஇன்பம் துய்ந்து வாழவேண்டும் என்னும் பேரருளால் முருகன் இயற்கை வாயிலாக அழகை உதவுகிறான்.

எம்பெருமான் நீலக்கடலில் காலையில் நெருப்புப் பிழம்பு போல ஞாயிறாகப் புறப்பட்டு உலகுக்கு உதவாவிடின், உலகம் என்ன பாடுபடும்! அவன் திங்களாக அமுதம் பொழிந்து உலகிற்கு இன்பமூட்டுவதை உணராத புலன்களும் புலன்களாமோ? முருகன் மலையாக நின்றும், ஆறாக ஓடியும் காடாக விளங்கியும் கடலாக ஒலித்தும், உடலாக உடனிருந்தும் உயிர்களை ஓம்பி வரும் திருவருள் திறத்தை எவரே புகழவல்லார்?

திரு. வி. கல்யாணசுந்தரனார்

### பலதும் பத்தும்

#### 'அக்கு பங்சர்'

அமெரிக்காவிலுள்ள மாற்று மருந்துக்கான தேசிய ஆராய்ச்சிக்குழு, ஏனைய மருத்துவ முறைகளைப் போல சீனாவின் அக்கு பங்சர்' (ஊசிக்குத்து) முறையையும் ஏற்றுள்ளது.

புகைப் பிடித்தல், போதைப்பொருள் போன்ற பழக்கங்களை மாற்ற இந்த மருத்துவ முறை நிவாரணம் அளிக்கிறது. அதனால்... உலக சுகாதார நிறுவனம் [WHO) கூட இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளதாம்.

ஊசிகளை முறைப்படி அக்கு பங்சர் புள்ளிகளில் ஏற்றியவுடன் மின்காந்த இயக்கம் மூளைக்குச் சென்று அங்கிருந்து உடனடியாக இரசாயனப் பொருட்களை வியாதி உள்ள இடத்திற்கு அனுப்பிக் குணம் ஏற்படச் செய்கிறதாம்!

— மயூரன்

## கற்கை நெறி வகுப்புக்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வந்த அலுவலக முகாமைத்துவம், வாகனப் பொறியியல், இதழியல் ஆகிய கற்கைநெறிகளுக்குரிய வகுப்புக்கள் வரும் சனிக்கிழமை முதல் வழமைபோல் இடம்பெறும்.

# - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவான சேவை -

**09-07-95 அன்று ஸ்ரீ லங்கா அரசினுல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவைபற்றிய விபரம் இங்கு தரப்படுகிறது.**

09-07-1995 அன்று யாழ். குடாநாடுபெரிய இடம்பெயர்வைச் சந்திக்கும்சூழ்நிலை உருவாகியது. ஸ்ரீலங்கா ராணுவம் ''முன்னேறிப் பாய்ச்சல்'' என்ற இராணுவ நடவடிக்கையை யாழ். குடாநாட்டின் மீது ஆரம்பித்தது. 09-07-1995ல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை 20-07-95 வரை தொடர்ந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையினுல் பெருமளவு மக்கள் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வாழவேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இதனுல் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடமபெயர்ந்தும் 1,400ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் பலர் வலுவிழந்து அங்கவீனராக வாழும் நிலையும் ஏற்பட்டது

இம்மக்கள் இடம்பெயர்ந்ததினுல் இம்மக்களின்வாழ்வுநிலை சீரழிக்கப்பட்டு நிர்க்கதியாகி ஏதிலிகளாக வாழும் சூழ்நிலை ஏற்பட்ட போது இம்மக்களை அரவணைத்து பராமரிக்கும் பெரிய பொறுப்பை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எடுத்துக்கொண்டு அரச திணைக்களம், அரச அதிபர் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலர்கள் கிராமசேவை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொதுமக்கள் அமைப்புக்கள், நலன்விரும்பிகள் என பலரோடும் ஒருங்கிணைந்து புனர்வாழ்வுப்பணியில் தனது நிறைவான சேவையை இம்மக்களுக்கு வழங்கியது.

இதனடிப்படையில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், சாவகச்சேரி பளை, மருதங்கேணி. உடுவில், பிரதேசசெயலர் பிரிவுகள் என இவ் இடம்பெயர்ந்த மக்களுக்கென 90ற்கு மேற்பட்ட இடம் பெயர்ந்தோர் முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்களின் அடிப்படை வசதிகளான உணவு; குடிநீர், மலசலகூடம், தங்குமிடம் என்பன தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுல் ஏற்படுத்தப்பட்டன.

இவர்களின் தற்காலிக நலன்புரி நிலையங்களாக பாடசாலைகள் ஆலயங்கள், பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள் என்றும் மறக்கமுடியாதவர்களாவர்,

இந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதிலும் இந்த மக்களை பராமரிப்பதிலும் ஏற்ற உதவிகளை ஒழுங்கு செய்வதிலும் உழைத்த அரச அதிபர், திட்டப்பணிப்பாளர், அவர்களின் ஊழியர்கள் உத்தியோகத்தர்கள். அரச திணைக்கள பிரதிநிதிகள் மாநகர சபை ஆணையாளர், ஊழியர்கள், பிரதேசசெயலர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் என்றும் நன்றிக்கும் போற்றுதற்குமுரியவர்கள்.

இந்த மக்களுக்கான நிறைவான சேவையில் சமைத்த உணவுவழங்குவது தொடக்கம் சமையல் உபகரணங்கள், உணவுப்பொருட்கள், உடைகள் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் விளக்குகள், பாய்கள் சத்துணவுகள், எரிபொருட்கள், வாகனவசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், மலசலகூட, குடிநீர், வசதிகள் தொண்டர்கள் என்பன வழங்கி தமிழர்புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து செயலாற்றிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், கெயர் ஸ்தாபனம், ரெட்பாளுஸ்தாபனம் போரூட் ஸ்தாபனம் போன்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் அறவழிப்போராட்டக் குழு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மக்கள் நலன்காக்கும் பிரிவு, சமூக அபிவிருத்தி மன்றம், அகதிகள் புனர்வாழ்வுநிதியம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், கிறிஸ்தவ அமைப்புகளின் ஒன்றியம், மனித முன்னேற்ற நடுநிலையம் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் வட-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் போன்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் மிகச்சிறந்த சேவையாற்றியுள்ளனர்.

மேலும், மனிதநேய உதவிகளையும், அவசர உதவிகளையும் உரிய நேரத்தில் இம்மக்களுக்கு கிடைக்க தம்மாலான முழு ஒத்துழைப்பையும் சேவையையும் வழங்கிய வணிகர் கழகங்கள். பேக்கரி உரிமையாளர்கள் சங்கங்கள், சிற்றூர்தி வாகன சங்கங்கள், பெரிய வாகன சங்கங்கள் றொட்டறி, லயன்ஸ் கழகங்கள் நோயாளர் நலன்புரிச் சங்கம், மிற்றவுண் கழகம், பாடசாலை இன்ரறக்ற் கழக மாணவ மாணவிகள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், தேவாலய மதகுருமார்கள், சனசமூக நிலையங்களும் பிரதிநிதிகளும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகமும் ஊழியர்களும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய பிரதிநிதிகளும் ஆசிரியர்களும் என்றுமே இவ் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிறைவான சேவைக்கு போற்றப்படவேண்டியவர்களாவர்.

பெரும்தொகையான மக்கள் இடம்பெயர்ந்தபோது. இவ் இடம்பெயர்ந்த மக்களை தமது சகோதரர்போலக் கருதி மனிதாபிமான அடிப்படையில் தனிப்பட்ட முறையில் உதவிகளையும், ஒத்துழைப்புகளையும், ஆதரவையும் வழங்கி, இம் மக்களை அரவணைத்தவர்களும் நன்றிக்குரியவர்களாவர். சி

# கிழக்கில் விடுதலைப்புலிகள் தாக்கலாம் படையினர் உசார் நிலையில்!

(மட்டக்களப்பு)

யாழ். குடாநாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அடுத்து கிழக்கில் புலிகள் மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படும் எந்தத்தாக்குதல் நடவடிக்கையையும் முறியடிக்க சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இராணுவம் மேற்கொண்டிருக்கின்றதென்று இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்;

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் புறங்களிலுள்ள கிராமங்களுக்கும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்குநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் மேலதிகப் பொலிசார் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரத்தகவல்கள் தெரிவித்தன. ர-சி

# உரத் தடையினுல் விவசாயம் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு உரம் கொண்டு வருவதற்கு படையினரும், அரசாங்கமும் தடைவிதித்துள்ளதால் கிளிநொச்சிப் பகுதியில் சிறுபோக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்

இதனுல் உப உணவுமற்றும் சிறு போக தானிய உற்பத்தியில் மிகக்கடுமையான சிரமம் எதிர் நோக்கப்படுவதாகவிவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்

-154

# இராணுவ அணுகு முறையால் அரசு எந்த இலக்கையும் அடைய முடியாது

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இராணுவ அணுகு முறைகளால் எந்த ஒரு இலக்கையும் அடைய முடியாது என ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் பணிப்பாளர் ஏ. எவ். அப்துல் அஸிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: வடக்கு-கிழக்கில்அமைதி சமாதானம் சௌஜன்யம் நிலவ வேண்டுமானுல் கடந்த கால இராணுவ தந்திரோபாய அணுகுமுறையை கைவிட்டு அரசியல் ரீதியான சமாதானப் பேச்சுவார்த்தைமூலமே அடைய முடியும்.

வடக்கு-கிழக்கு மக்கள் யுத்தத்தின் கோரத்தினுல் தாங்கொணு துன்பம் அனுபவித்து வரும் இவ்வேளையில் சில சந்தர்ப்ப இனவாத கட்சிகள் யுத்தத்தின் மூலமே இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும் எனக் கூறிவருகின்றனர்.

இந்நிலமை மாறி சமாதானசூழ்நிலைஏற்படசகலசக்திகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ருர். -கசி

வலி – கிழக்கு சங்கத்தின்

# உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவினுல், வலிகிழக்கு உதைபந்தாட்டச்சங்கத்துடன் இணைந்த விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டப்போட்டிகள் மீண்டும் எதிர்வரும்சனிக்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடமைதானத்தில் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும்சனியும்,ஞாயிறும் யாழ்: பல்கலைக்கழகமருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளின் விபரங்கள் வருமாறு 29ம் திகதி சனிக்கிழமை யாழ்: பாரதி கழகம் எதிர் ஈச்சமோட்டை கழகம். யங்ஸ்ரார் கழகம் எதிர் அறிவொளி கழகம்:

30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் கழகம் எதிர் கென்னடி கழகம் றேயல் கழகம் எதிர் வைக்கிங்ஸ் கழகம்.

-வி

# சுகாதார அலுவலகமும் படையினரால் சேதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தையும் இராணுவத்தினர் சேதப்படுத்தியுள்ளனர்.

அலுவலகத்தில் இருந்த பெறுமதிமிக்க பொருள்கள் படையினரால் எடுத்து செல்லப்பட்டுள்ளதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைவிட அலுவலகத்துக்குள் படையினர் அடுப்பு வைத்துச் சமைத்துச் சாப்பிட்டுள்ளனர்.

-170-சி

# சமாதான பேச்சுவார்த்தையை சந்திரிகா நிராகரித்தார்

(கொழும்பு)

வடக்கில் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சை நடாத்துமாறு இரு மேற்கு நாடுகள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா நிராகரிததுள்ளதாக லங்காதீப பத்திர்கை தெரிவித்துள்ளது.

மேற்குலக நாடுகளின் இந்தக்கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவும் சில சிரேஷ்ட அமைச்சர்களும் உடனடியாகவே நிராகரித்து விட்டனராம்.

விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில் அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இறங்க விரும்பவில்லையென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது. ம.சி

# சுவரொட்டி வைத்திருந்த ஐ. தே. க. எம். பி. கைது

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான சுவரொட்டிகளை வைத்திருந்தார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், 3 பொதுமக்களும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான திரு. தினேஷ் தொடங்கொட கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டபோதும் பொதுமக்கள் மூவரையும் பொலிசார் காவலில் வைத்துள்ளனர்:

அரசுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்குபவர்களை அண்மைக் காலமாக பொலிசார் கைது செய்து வருவதும் தெரிந்ததே: -ம-சி

# மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை ஊழியர்களுக்கு மண்ணெண்ணை வழங்கப்பட்டு வருகிறது.

லீற்றர் இருபது ரூபா விலையில் நான்கு லீற்றர் மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

குறைந்தளவு மண்ணெண்ணைபரல்களே வைத்தியசாலைக்கு வந்ததால் ஊழியர்களுக்கு இம்முறை குறைந்தளவு மண்ணெண்ணையே விநியோகிக்கப்பட்டு வருகின்றது:

170- ரி

# கூட்டுறவுச் சங்க ஊழியர் கொழும்பில் தங்க வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ்: மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்கள் கொழும்பு சென்று தங்குவதற்கான தங்குமிடவசதியொன்றை யாழ். மாவட்டவிவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான கட்டிடம் ஒன்றை சமாசம் பம்பலப்பிட

(5ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஏவுகணைக்கு மாற்று நடவடிக்கை காணும்வரை விமானத் தாக்குதல் நடத்தக் கூடாது

## முன்னாள் விமானப்படைத் தளபதி பேட்டி

(கொழும்பு)

'நான் இப்போது எனது முன்னைய பதவியில் இருப்பேனாயின் விடுதலைப் புலிகளின் ஏவுகணைக்கான மாற்று நடவடிக்கை காணும்வரை வடக்கில் விமானத் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கமாட்டேன் எனக் கூறுவேன்' இவ்வாறு முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரிகுண திலக்கா சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; விமானப் படையினர் தற்போது ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்கிறார்கள். இதுவரை நாங்கள் நூறு விமானப்படையினரை இழந்து விட்டோம் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்புவதற்கேற்ற மாற்றுவழி இல்லாத தற்போதைய நிலையில் மேலும் பல விமானிகளை இழக்க நாம் தயாரில்லை. இதே வேகத்தில் விமானங்களையும் இழக்கக் கூடாது.

கடந்த ஏப்ரல் 28, 29ம் திகதிகளில் இரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது. முதலாவது விமானம் சுடப்பட்டதும் அது இயந்திரக் கோளாறு எனக் கூறப்பட்டது. மறுநாளும் விமானம் விழுந்தபோது அது ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது என ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது மற்றுமொரு விமானமும் விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகியது. இப்போது விமானப்படையினர் அது என்ன ரக ஏவுகணை என்பதை ஆராய்கின்றார்களா? முதலாவது சம்பவம் ஏப்பிரலில் நடந்தது. தற்போது ஜூலை மாதத்திலும் ஒரு விமானம் விடுதலைப் புலிகளின் தாகுதலுக்குள்ளாகியது. கடந்த மூன்று மாத காலமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

பொதுமக்களின் இழப்புப் பற்றி எப்போதும் நான் கவலை அடைபவன். விடுதலைப் புலிகளும் படையினரும் போரில் மடிகிறார்கள். இது தவிர்க்க முடியாததொன்று. ஆனால் பொதுமக்கள் இழப்பு தவிர்க்கப்படவேண்டும் பொதுமக்களின் இழப்பின்றியே தீவிரவாதத்தை அடக்குவதேனது திட்டமாக இருந்தது தற்போது நாம் பொதுமக்கள் இழப்புகள்பற்றி அதிகம் கவனம் செலுத்துவதில்லை. தீவிரவாதத்தைக் களைவது இந்த வகையில் அல்ல

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவேண்டுமாயின் தமிழ்மக்களின் உள்ளங்களைக் கவர வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்ய முடியாது. தேவாலய தாக்குதலில் 65 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். தற்போதைய தாக்குதலில் 200 பொதுமக்கள் இறந்தனர். இந்த வகையான செயல்களால் தமிழ் மக்களின் இதயங்களைக்கவருவது கடினமாகும்.

யாழ்ப்பாணத்தில் $5\frac{1}{2}$ லட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் உள்ளனர் அவர்கள் நகராவிடில் மரணங்கள் அதிகரிக்கும் நான் யாழ்ப்பாணம் சென்றிருக்கிறேன். அருகருகே குடியிருப்புக்கள் உள்ளன. இங்கே விமானத் தாக்குதல் தவிர்க்கப்பட வேண்டியது. தாக்குதல் செய்வதாயின் பொது மக்கள் மீது குண்டுகளை வீசுவதாகவே அமையும்.

ஆகவே மக்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேருது விடின் பொது மக்கள் இழப்பும் அதிகமாகும் வெல்வதும் கடினமாகும். தீவிர வாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் நான் முன்னணியில் நிற்பேன். ஆனால் அது பொதுமக்களின் இழப்பைக்கொண்டல்ல. இப்போதும் நடந்து விட்டது. இனியும் நடககும் ஒரு தாக்குதலை, நடக்கும்போது மக்களை கோயில்களுக்கும் தேவாலயங்களுக்கும் செல்லுமாறு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் விடுதலைப்புலிகள் கூட அங்கு செல்லவாய்ப்புண்டு. ஆனால் அந்த இலக்கை நாங்கள் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். கே-ர-ரி

# வடபகுதி மீதான பாரிய யுத்தத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

(கொழும்பு)

வடபகுதி மீது ஆரம்பிக்கும் பெரிய அளவிலான யுத்தமொன்றின் போது பாரதூரமான பல விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று கலாநிதி ஜயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; வடபகுதி மீதான யத்தத்தில் அரசாங்கப் படையினர் பாரிய அளவில் கொல்லப்படுவதும் காயப்படுவதும் விடுதலைப் புலிகளுக்கு குறைந்தளவு பாதிப்பே ஏற்படும். வடபகுதி மக்கள் பாரிய அளவில் கொல்லப்படுவதும், காயப்படுவர் வடபகுதி தாக்குதலின் கடுமையைக் குறைக்க விடுதலைப் புலிகள் தென்பகுதியில் கொழும்பில் தாக்குதல்களையும் அழிவு வேலைகளையும் ஆரம்பிப்பர்.

இவ் அனைத்திலுமே பாரதூரமான அரசிய தீங்குகளும் ஏற்படுவது நிச்சயமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சர்வதேச சமூகம் தற்போது பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதானது சமாதானம் தொடர்பாக அரசாங்கம் காட்டியுள்ள வெளிப்பாடும் யுத்தத்திற்கு அரசாங்கம் உட்பட்டுள்ளமை யினுலாகும்.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் செய்யப்படும் மாபெரும்தாக்குதலொன்றின்பின் இந்நிலைமை மாறுபட நிறையவே இடம் உள்ளது. அந்நிலையில் சர்வதேச சமூகத்தின் வெறுப்பு அரசாங்கத்தின் மீது திரும்புவதைத் தவிர்க்க முடியாதிருக்கும். சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட அரசாங்கமொன்றிற்கு ஏற்படும்விதியை நாம் 94ற்கு முற்பட்ட காலத்தில் கண்டோம் என்றும் அவர் தெரிவித்தார். (ர-ரி)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகப் பிரிவின்வதிவிட வேளாண்மை போட்டியில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்

பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் இடம்பெறும் இவ்விழாவிற்கு யாழ். பல்கலைக் கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். 170-சி

## பாவலரே பாடுவீரா?

பாவை யிடை யழகும்
பால்நிலவி னொளி யழகும்
காவை நிறைக்கு மலர்க்
குளிரழகும் தளிரழகும்
நாவை யினிப்பு செய்யும்
நல்ல தமிழ்ச் சொல்லழகும்
தேவை யெனக் குழையக்
தேன் கமழகும் பாவலரே!

சாவை யணைத்தபடி
சாய்ந்திருந்த பாலகனின்
கோவைச் சிறு இதழின்
கோடியிலே ஈரமுறக்
பாலை வழித்த முலை
பாதி தெரியச் சிதறிப்
பாவை கிடந்தாளே
பார்த்த வளைப் பாடுவீரோ?

— நிம்மதி

## இன்று

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ தொண்டர்சேவை சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் இன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 29 ஆம் திகதி சனிக்கிழமையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில பிற்பகல் 4.30 மணி தொடக்கம் நடைபெறும். 154

## கூட்டுறவுச்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டியில் வாடகைக்கு அமர்த்தியுள்ளது: இக்கட்டிடம் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும்.

இக்கட்டிடத்தில் தங்கும் பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்கள் யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தின் அனுமதி பெற்றே தங்க வேண்டும் என்று சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. 170-கி

## அளவெட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப்பட்டது:

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை 1-30 மணிக்கு யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கிச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் மூளாய், அராலிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (90-170-கி)

## அமரர் அருளானந்தம்

# பழகுவதற்கு இனிய அமைதியான மனிதர்

சிரித்த முகம், சிந்தனையைத் தூண்டிவிடும் கண்கள் அமைதியான சுபாவம், அன்பான பேச்சு யாரையும் நோகச் செய்யாத செயல்பாடு. அத்தனையும் நிறைந்த தோற்றம் உடையவர் அமரர் அருளானந்தம்.

ஈழநாடு நிறுவனத்தின் அச்சகத்துறையில் சுமார் இருபது வருடங்களாக கடமையாற்றி எல்லோரினதும் அன்பிற்கும் பாத்திரமாக திகழ்ந்தவர் அமரர் அவர்கள்;



அமரர் அருளானந்தம் மறைந்து இன்று 31 நாட்கள் பூர்த்தியாகின்றபோதும் அவரது நினைவுகள் அவரோடு பழகிய நாட்கள் இன்னும் எம்மை விட்டு மறையவில்லை.

அச்சகப்பகுதிக்குள் நாம் நுழைகின்றபோது அவரின் உருவம் எம்முன்னே நிற்பதாக தோன்றும். ''ஒன்றுக்கும் அவசரப்படாதீர்கள் எல்லாம் இறைவன் வழியே தான் நடக்கும்'' என்று பிரச்னைகள் வருகின்ற பொழுது ஆறுதல் வழங்கும் அவரது தத்துவ வார்த்தைகள் இன்னும் எமது காதுகளிலே ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது.

[இன்று 31வது நாள் நினைவையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது]

ஈழநாடு அச்சகத்துறை ஊழியர்களின் தொழிற்சங்க வரலாற்றில் அருளானந்தத்திற்கு தனியிடமுண்டு ஊழியர்கள் நடத்திய எத்தனையோ போராட்டங்களுடன் ஒன்றுக கலந்திருந்து அந்தப் போராட்டங்கள் வெற்றியடைவதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்.

அந்த நாட்களில் அருளானந்தம் போன்ற அனைத்து ஊழியர்களும் ஆற்றிய பணிகளை எவரும் மறந்து விடமாட்டார்கள்.

1981-ம் ஆண்டு எமது நிறுவனம் சிங்களக் காடையர்களால் எரிக்கப்பட்ட போது அன்று இரவு கடமையிலிருந்தவர்களில் அமரர் அருளானந்தமும் ஒருவர்;

திடீரென எமது நிறுவனம் சுற்றிவளைக்கப்பட்டு எரியூட்டப்படுகிறது. இரவுகடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் உடுத்த உடுப்புகளுடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பியோடினார்கள். அன்று சில ஊழியர்கள் எரிகாயங்களுக்குள்ளானார்கள். அமரர் அருளானந்தம்போன்றவர்கள் மயிரிழையில் தப்பினார்கள்.

யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து இவ்வாறு பல தடவைகள் உயிராபத்து மத்தியிலும் அருளானந்தம் ஒருபோதும் கடமைக்கு வராமலிருந்ததில்லை. அவ்வளவு தூரத்திற்கு அவர் கடமையில் கண்ணுயிருந்தார்.

அவரது மரணத்திற்கு முதல்நாள் இரவு ஜுன் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை அவருக்கு இரவுக்கடமை. வழமைபோல அன்றைய இரவுக் கடமைகள் யாவும் நிறைவு பெற்று அச்சகப் பகுதி விநியோகப்பகுதி ஊழியர்களைத் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள் தமது கடமைகளை முடித்து விட்டு வீடுதிரும்பினர்.

அச்சகப்பகுதியில் அருளானந்தம் அன்று இரவு தமது பகுதியில் தங்கியிருந்தார் ஆசிரியர் பகுதியில் அன்றிரவு பொறுப்பாக இருந்த நான் தங்கியிருந்தேன்.

அன்று இரவு நிறுவனத்தில் தங்கியிருந்த அனைவரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தோம். நேரம் அதிகாலை 2 மணி திடீரென மண்டைதீவுப் பக்கமிருந்து துப்பாக்கி வேட்டொலிகள் காதைபிளக்கின்றன ஷெல்கள் மழைபோல பொழிகின்றன. நகரப்பகுதி மக்கள் உறக்கத்திலிருந்து விழித்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் மண்டைதீவு முகாமுக்குள் புகுந்துவிட்டனர் என்றசெய்தி கிடைத்தது. அச்செய்தியைப் பிரசுரிப்பதற்கான நடவடிக்கையை அமரர் அருளானந்தம் தனியனாக நின்று உதவி வளங்கினார்.

அடுத்த நாள் பகல் வேலை செய்வதற்காக காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் காலை 8-40 மணியளவில் யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாட்டிற்கு சமீபமாக விழுந்த ஷெல்லினால் அவர் அகால மரணமானார்.

அவரது மரணம் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். நல்ல ஒரு மனிதனை நாம் இழந்து விட்டோம்; நல்லவர்கள் பல நாட்கள் வாழ்வதில்லை. அதனால் தான் அருளானந்தத்தின் வாழ்வும் இடையில் நிறைவு பெற்றுவிட்டது.

அவரது மறைவால் துயருற்று இருக்கும் அவர்தம் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

என். கே. துரைசிங்கம்

(ஆசிரியர் பகுதி)

# 'லீப் போர்வேட்' தோல்வியால் கருத்துக் கணிப்பு பிசுபிசுப்பு

(கொழும்பு)
படையினர் அண்மையில் மேற்கொண்ட லீப்போர்வேட் இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின் எதிர்வரும் நவம்பரில் வடக்கு கிழக்கில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்ததாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ் குடாவை முழுமையாகக் கைப்பற்றிய பின் அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி பின்னர் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக கருத்துக்கணிப்பு ஒன்றை நடாத்துவதே அரசாங்கத்தின் திட்டம் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

எனினும் லீப்போர்வேட் தோல்வியில் முடிவடைந்ததால் அரசின் இத்திட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டது க-கி

## சகோதரிகளுக்கு வாழ்வளிக்க தன்னுயிர் நீத்த சகோதரன்

(புதுடில்லி)
இரு சகோதரிகளுக்கு 'வரதட்சணை' வழங்குவதற்காக 19 வயசு இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் புதுடில்லியில் இடம் பெற்றுள்ளது.

தான் தற்கொலை செய்த பின் தனது உடலுறுப்புக்களை விற்றுவது தனது இரு சகோதரிகளுக்கு வரதட்சணை வழங்கி திருமண ஏற்பாடுகள் செய்யுமாறு அந்த இளைஞர் தாய்க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பரிதாப முடிவுக்கு வந்தவர் சுனிதிகுமார் என்ற இளைஞராவார். ம கி

# அமெரிக்க போதகர் முல்டர் இன்று நாடு கடத்தப்படுகிறார்

(கொழும்பு)
பொலிசாரால தடுத்து வைக்கப்பட்டிருந்த தேசிய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த அமெரிக்கப் போதகரான கெனத் முல்டர் இன்று அதிகாலை அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படவிருந்தார்.

இன்று அதிகாலை 1-55க்கு கட்டுநாயக்காவிலிருந்து இவரைச் சுவிஸுக்கு ஏயர் லங்கா விமானத்தில் அனுப்பி பின்னர் அங்கிருந்து அமெரிக்காவுக்கு அனுப்ப ஏற்பாடாகியிருந்தது.

இலங்கையிலிருந்து திரும்பிச் செல்ல தன்னிடம் விமான டிக்கட்டுக்கு பணம் இல்லை என தெரிவித்திருந்ததை அடுத்து இவரின் பயணச் செலவை அமெரிக்க தூதரகம் பொறுப்பேற்றது.

கடந்த சனிக்கிழமை பொலிசாரால் கைது செய்யப்பட்ட 26 வயதான முல்டர் கறுவாக்காடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவ்வேளை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் முல்டரைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

இவரை இரண்டு வாரம் தடுத்து வைக்க கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தபோதிலும் மூல்டரை உடனடியாக நாடு கடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

மதபோதனைக்காக கொழும்புககு வந்த இவர் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று வந்ததாகவும், கைதான போது இவரிடம் அரச விரோதப் பிரசுரங்கள் காணப்பட்டதாகவும், அரசு தெரிவித்துள்ளது. ஆனல் தன் மீதான குற்றச்சாட்டுகளை போதகர் முல்லர் மறுத்துள்ளார். -கி

## அமைதிக்காக உழைப்பதாக அரசு கூறுவது கேலிக்குரியது

(கொழும்பு)
மக்களின் அமைதி வாழ்வுக்காக உழைத்தவர்களைத் தூக்கி எறியும் அரசு, தான் மக்களின் நலனுக்காக பாடுபடுகிறது என எவ்வாறு கூறிக்கொள்ளமுடியும். அது கேலிக்குரியது என இலங்கையிலிருந்து நாடுகடத்தப்படும் அமெரிக்கரான போதகர் கென்னத் முல்டர் கூறியுள்ளார்.

தான் இலங்கையில் தங்கியிருந்த பதினொருமாத காலத்திலும் அமைதிக்காக உழைத்ததாகவும் முல்டர் கூறியிருக்கின்ருர். ம கி

## இரண்டாம் தவணை விடுமுறை

(கொழும்பு)
பாடசாலைகள் மூன்ரும் தவணைக்காக மீண்டும் ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி திறக்கப்படவுள்ளது: இரண்டாம் தவணை விடுமுறைக்காக தென்பகுதி பாடசாலைகள் இன்று மூடப்படுகின்றன. ம-கி


வெகுவிரைவில் எதிர்பாருங்கள்

"வேரும் விழுதுகளும்"

ஓர் கல்வியியற் கண்காட்சி

- செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(ஏ-5141)



வெகுவிரைவில்

எதிர்பாருங்கள்!

நிதர்சனமும்

மட்டு- அம்பாறை சிறப்புப்படையணியும்

★ இணைந்து தயாரித்து வழங்கும் ★

சி. சேரனின்

"உறங்காத கண்மணிகள்"

[முழுநீள திரைப்படம்]

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு

நிதர்சனம்

தமிழீழம்

(எ5155)


## நேபாளத்தில் 140 பேர் பலி!

(காட்மண்டு)
நேபாளத்தி பெய்துவரும் பலத்த மழை காரணமாக 140 பேர் பலியாகியுள்ளனர். 2000க்கும் அதிகமானோர் வீடிழந்துள்ளனர். 12 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன என காட்மண்டு அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இறந்தோர் தொகைமேலும் அதிகரிக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ-கி

### ரெலிகொம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மறைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நேரத்திற்கு வெடிக்கும் இக் குண்டு வெடித்திருந்தால் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. க.சி

### பாகிஸ்தான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ளில் வைத்து இவ் ஆயுதங்கள் விமானங்களில் ஏற்றப்பட்டதாகவும் அவ் விமானங்கள் நேற்றிரவு கொழும்பு நோக்கி புறப்படவிருந்ததாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை கொள்வனவுசெய்துள்ள ஆயுதங்களின் விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ம-கி

### வலி வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வலி வடக்கிலிருந்து நேற்று அதிகாலை சரமாரியான ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டவாறு மல்லாகம் பகுதியை நோக்கி முன்னேற்ற முயற்சியை, படையினர் மேற்கொண்டனர்

நேற்று அதிகாலை 5-30மணியளவில் படையினர் மேற்கொண்ட இம்முன்னேற்ற முயற்சியை விடுதலைப்புலிகள் சில மணி நேர தீவிர தாக்குதலின் மூலம் முறியடித்தனர்.

விடுதலைப்புலிகளின் திரமிகு தாக்குதலையடுத்து படையினர் இழப்புகளுடன் தமது பழைய நிலைக்கு பின்வாங்கினர். க-கி

## சித்தாண்டி, திருக்கோவிலில் படையினர் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)
சித்தாண்டியில் நேற்றுமுன் தினம் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியானர். மற்றும் மூவர் படுகாயமுற்றனர் என இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

இதேவேளை திருக்கோவில் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமுற்றார். -கி

## மண்டைதீவு குண்டுவெடிப்பில் இராணுவ சிப்பாய் பலி

(கொழும்பு)
மண்டைதீவு இராணுவ முகாம்பகுதியில் குண்டுவெடிப்புச் சம்பவமொன்று நிகழ்ந்துள்ளதாக இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் இராணுவ நடவடிக்கை தலைமைச்செயலகம் தெரிவித்திருக்கிறது. (கி)

## 5ம் ஆண்டு புலமைப்பரிசில் 15 ஆயிரமாக அதிகரிக்கும்

(கொழும்பு)
அடுத்த வருடத்திலிருந்து ஆண்டு-5 புலமைப் பரிசிலின் எண்ணிக்கையை 15 ஆயிரமாக அதிகரிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

வறிய குடும்பங்களை சேர்ந்தோருக்கு கூடுதல் நிவாரணம் வழங்குமுகமாகவே இவ் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக கல்வி உயர்கல்வியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்கும் எண்ணிக்கை 7500 இலிருந்து 10 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டதாக ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-கி

## கைதி மரணம் தொடர்பாக 2 பொலிஸார் வேலைநீக்கம்

(கொழும்பு)
போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் தடுப்புக்காவலிலிருக்கும்போது மரணமானது தொடர்பாக இரு பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர் பொலிஸ் காவலில் இருந்த வேளை மூன்ருவது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொண்டதாக முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் இது தொடர்பாக மேற்கொள்ளடபட்ட விசாரணையைத் தொடர்ந்து குறிப்பிட்ட போதைவஸ்துகடத்தல் சந்தேக நபர்தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை அவருக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், கான்ஸ்டபிளும் வேலை நீக்கப்பட்டிருக்கிருர்கள். -கி

### அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தலைப் புலிகள் நிர்வாகம் செய்து வருகிருர்கள், உத்தேச தீர்வுத்திட்டத்தை அவர்கள் எதிர்ப்பார்கள். ஏற்க மறுப்பார்கள், என்ருர்.

உத்தேச அதிகார பகிர்வுத் திட்டத்தின் படி இலங்கையின் 8 மாகாணங்களில் பொலிஸ் கல்வித்துறை வரி விதிப்பு வளர்ச்சி திட்டங்கள் என்பன அவ்அவ் மாகாணங்களின் பொறுப்பில் இருக்கும் பாதுகாப்பு வெளியுறவு வர்த்தகம் என்பன மத்திய அரசின் பொறுப்பில் இருக்கும்

தேசிய அளவில் கருத்துக் கணிப்பு நடைபெறுவதுடன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினரின் இதங்கு ஆதரவும் வேண்டும்.

இதேவேளையில் நாடாளுமன்ற தமிழ்க் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட் உட்பட பலகட்சிகள் தீர்வுத்திட்ட யோசனைகள் குறித்து முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. -க கி

### இரு போராளிகள்

(1ம் பக்கத் தொடர்சி)
எடுத்துச் செல்லப்பட்டு இறுதி வீரவணக்கத்திற்காக பி.ப. 4 மணிக்கு யாழ். ஐந்து சந்தி கார்த்திகா பாலர் பாடசாலையில் வைக்கப்பட்டு கூட்டத்தின் பின் பூரண அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்படும். -கி

## பயணிகள் உயிருடன் மீட்பு

(லண்டன்)
நைஜீரிய ஜெட் விமானம் ஒன்று நேற்று வான் பரப்பில் தீப்பிடித்து வீழ்ந்த போதிலும் அதில் பயணம் செய்த 82 பயணிகளும் தெய்வாதீனமாக உயிராபத்து எதுவும் இன்றிக் காப்பாற்றப்பட்டனர்.

டி.சி 50 ரக இந்த விமானம் தனியார் நிறுவனமொன்றிற்கு சொந்தமானது எஞ்ஜின் கோளாறு காரணமாக தீப்பிடித்த இந்த விமானம் லைபிரியாவில் வீழ்ந்தது. கி


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office of Lanka under License number B/168361?.